## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

# 1994 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தவற்-ஈ-ஹறியா (இலங்கை) (கூட்டிணைத்தல்) சட்டம்

*(1994, ஜூன் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது***

*1994, ஜூன் மாதம் 10 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 75* *தபாற் செலவு : ரூபா 1.00*

1994 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தவற் – ஈ – ஹறதியா
(இலங்கை) (கூட்டிணைத்தல்) சட்டம்

[1994, ஜூன் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 71/92

தவற்–ஈ–ஹறதியா (இலங்கை) வைக் கூட்டிணைப்பதற்கானதொரு
சட்டம்.

முன்னுரை.

(அ) மேன்மைதங்கிய புனிதத் தலைவரான டாக்டர் சையத்னு மொகமட் புர்ஹானுத்தின் அவர்கள் தவற்–ஈ–ஹறதியாவின் மதக் கட்டளைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் இணங்க பதவிப்பெயர் குறித்த செயலொன்றின் மூலம் அவருக்கு முன்னிருந்தவரால் முறையாக நியமிக்கப்பட்டு தாயிஅல்–முத்லக்கின் ஐம்பத்திரண்டாம் மதகுருவாக இருக்கின்றாராதலாலும் :

(ஆ) (இதனகத்துப்பின்னர் "சமூகத்தவர்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) ஷியா, பாற்றிமி, இஸ்மாயிலி, ராயிபி, தாவூதி போறுக்கள் என வேறுபடுத்திக்காட்டும், இஸ்லாத்தின் ஒருமதப் பிரிவினரான, உலகளாவிய தாவூதி போறு சமூகத்தவர்களின் அதியுயர் தலைவராக சத்ர்இன் இமாமினது பிரதிநிதியும் துணைப் போாளருமான தாயிஅல்–முத்லக் திகழுகின்றாராதலாலும் :

(இ) தாயிஅல்–முத்லக்கின் உறைகின்ற தவற்–ஈ–ஹறதியா சமூகத்தவர்களின் ஆன்மீக, சமய, உலகியல் மற்றும் நல்லொழுக்கத் தேவைகளை நிறைவேற்றி உருப்பெறச் செய்வதோடு அல்லாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வழிபாட்டிடங்களையும் சமூகத்தவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான சனசமூக நிலையங்களையும் ஒழுங்கமைப்புகளையும் தாபிக்கின்றதாதலாலும் :

அத்துடன் தவற்–ஈ–ஹறதியாவுக்கும் சமூகத்தவர்களின் ஏனைய ஒழுங்கமைப்புகளுக்கும் சொந்தமான அல்லது அவற்றுள் எதனதும் அல்லது எல்லாவற்றினதும் அனுகூலத்துக்காகவும் நன்மைக்காகவும் எவரேனும் ஆளினால் அல்லது ஆட்கள் குழுவினால் வைத்திருக்கப்பட்டு அத்தகையனவாக தாயிஅல்–முத்லக்கினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லாச் சொத்துக்களும், நிதிகளும், ஆதனங்களும், முதலீடுகளும் தாயிஅல்–முத்லக்குக்கு உரித்தாக்கப்பட்டு அல்லது அவரால் வைத்திருக்கப்பட்டு உடைமைகொண்டிருக்கப்பட்டிருப்பதாதலாலும், அவர் தமது தனி மற்றும் பூரண தற்றுணிபில் அவற்றின் நிருவாகத்தையும் முகாமையையும் கட்டுப்படுத்தி வழிகாட்டி வருகிறார் ஆதலாலும் :

அத்துடன் இலங்கையில் சொல்லப்பட்ட சொத்துக்களினதும் நிதிகளினதும் ஆதனங்களினதும் முதலீடுகளினதும் அத்துடன் ஏனைய அலுவல்களினதும் தொடர்ச்சியானதும் திறமையானதுமான கட்டுப்பாட்டுக்கும் அவற்றின் நிருவாகத்தினதும் முகாமையினதும் வழிகாட்டலுக்கும் தாயிஅல்–முத்லக்கின் பதவியில் அமரும் மதகுருவான அவரது வழியுரிமையாளர்களும் இதனகத்துப்பின்னர் எடுத்துக்காட்டப்பட்டவாறான இடையறு வழியுரிமை கொண்ட தனிக்கூட்டுத்தாபனமொன்றாகக் கூட்டிணைக்கப்படுவது விரும்பத்தக்கதும் உசிதமானதும் ஆதலாலும் :

2—ஷ 023665—1,145 (94/02)

அத்துடன், ஐம்பத்திரண்டாவது தாயிஅல்-முத்லக்கான மேன்மை தங்கிய புனிதத் தலைவரான டாக்டர் சையத்னா மொகமட் புர்ஹானுதீன் அவர்கள் தாயிஅல் – முத்லக்கை கூட்டிணைப்பதற்காக விண்ணப்பித்துள்ளாராதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

ஆகவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1994 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தவற்-ஈ-ஹறியா (இலங்கை) (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

தவற்-ஈ-ஹறியா (இலங்கை) வைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் தாவூதி போறா சமூகத்தவர்களின் அதியுயர் தலைவரான தாயிஅல்-முத்லக், அதாவது ஐம்பத்திரண்டாவது தாயிஅல் – முத்லக் புனிதத் தலைவரான டாக்டர் சையத்னா மொகமட் புர்ஹானுத்தீன் அவர்களும் தவற் – ஈ – ஹறியாவின் மதக்கட்டளைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் இணங்க பதவிப் பெயர் குறித்த செயலொன்றின் மூலம் அவருக்கு முன்னிருந்தவரால் முறையாக நியமிக்கப்பட்டு தாயிஅல் – முத்லக் பதவியில் அமரும் மதகுருவான அவரது வழியுரிமையாளர்களும் இடையறா வழியுரிமை கொண்ட தனிக் கூட்டுத்தாபனமாக இருத்தலும் வருதலும் வேண்டும். அத்தனிக்கூட்டுத்தாபனம் "தவற் – ஈ – ஹறியா (இலங்கை)" (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) என அறியப்படுதல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரலாம், என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அதன் விருப்பப்படி அதனை மாற்றுவதற்கும் உள்ள பூரண தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. இலங்கையின் தவற்-ஈ-ஹறியாவின் ஆன்மீக, சமய, மதத்துறை சார், தரும, கல்வி, சமூக மற்றும் ஏனைய நோக்கங்களை ஊக்குவிப்பது கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள் ஆதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. தவற்-ஈ-ஹறியாவின் மதக்கட்டளைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் இணங்கவும், இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமையவும், கூட்டுத்தாபனம் மேற்படி குறிக்கோள்களின் பொதுத்தன்மையை மட்டுப்படுத்தாமல், பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தகைமையும், உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும் கொண்டதாக இருத்தல் வேண்டும் :—

(அ) அல்லாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வழிபாட்டு இடங்களையும் சமூகத்தவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான சனசமூக நிலையங்களையும் ஒழுங்கமைப்புகளையும் நிர்மாணித்தல், கட்டியெழுப்புதல், தாபித்தல், அத்துடன் நிருவகித்தல் ;

(ஆ) இலங்கையிலாயினுஞ்சரி உலகத்தில் எப்பாகத்திலாயினுஞ்சரி அமைந்துள்ள அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தையும் அத்துடன் அவற்றை விற்பதற்கு, ஈடுவைப்பதற்கு குத்தகைக்கு கொடுப்பதற்கு, கொடுத்துமாற்றுவதற்கு அல்லது வேறுவகையாகக் கையாளுவதற்கு, உரித்தைக் கைவிடுவதற்கு அல்லது ஒழிப்புசெய்வதற்கு உள்ள பூரண தத்துவத்துடன், ஏதேனும் கொள்வனவு, அர்ப்பணிப்பு, நன்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு, மாபுரிமையாக வந்தடைதல்மூலம் அல்லது வேறுவகையாக கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய மரணச்சொத்து, அவற்றின் கண்ணுள்ள உரிமை அத்துடன் அக்கறை ஒவ்வொன்றையும் கொள்ளுதல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக எத்தன்மைத்தான எம்முறையிலேனும் சொல்லப்பட்ட ஆதனம், மரணச்சொத்துரிமை அல்லது அக்கறை என்பவற்றுள் எதனையும் வைத்திருத்தல் ;

(ஈ) தொகை அல்லது பெறுமதிபற்றிய மட்டுப்பாடு எதுவும் இல்லாமலும் கொள்வனவு, கடன் என்ற வகையாகவாயினுஞ்சரி அல்லது வேறு வகையாகவாயினுஞ்சரி, கூட்டுத்தாபனத்தின் நிதிகளை அல்லது அவற்றின் பாகத்தை —

(i) அது பொருத்தமானதெனக் கருதும் வட்டி கொண்டிராத பிணையங்களைக் கொள்ளுதல்;

(ii) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்தல்;

(iii) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தின்மீது, வட்டியின்றிய ஈடுகள்; அத்துடன்

(iv) கூட்டுத்தாபனம் பொருத்தமானதெனக் கருதும் வேறு எவையேனும் முதலீடுகள்

என்பவற்றில் முதலீடு செய்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்தினது ஏதேனும் ஆதனத்தின் நிருவாகத்தையும் முகாமையையும், அது பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளின் மீது எவரேனும் ஆளிடம் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவிடம் பொறுப்பாகவிடுதல்;

(ஊ) சமய சார்பான உதவுதொகைகளைச் சேகரித்தலும் பெற்றுக் கொள்ளலும்;

(எ) 'குவார்தன் ஹஸனு' (வட்டி இல்லாக் கடன்கள்) பெறுதலும் கொடுத்தலும், அதனை மீளக் கொடுப்பதற்கான நியதிகளை நிர்ணயித்தல், கூட்டுத்தாபனம் பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மீது அத்தகைய கடன்களுக்கான பிணைப்பொறுப்பு கொடுத்தல் அல்லது எடுத்தல்;

3—ம. 023665 (94/02)

(ஈ) ஏதேனும் கடனுக்கு, கடப்பாட்டுக்கு அல்லது பொறுப்புக்குப் பிணைப்பொறுப்பாக்குவதற்காக கூட்டுத்தாபனத்தின் அசையுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்கள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும், வட்டி இல்லாமல், பொறுப்பாக்குதல், ஈடுவைத்தல், அடைமானம் அல்லது அடகுவைத்தல்;

(உ) அதன் குறிக்கோள்களின் தன்மையை இலங்கையிலும், இலங்கைக்கு வெளியிலும் விஸ்தரித்தல்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்களை நியமித்தல், தொழிலுக்கு அமர்த்துதல் அல்லது பதவியிலிருந்து விலக்குதல்; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

நியமத்தர்களை நியமிப்பதற்குள்ள தத்துவம்.

5. கூட்டுத்தாபனத்தின் பணிகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு காலத்துக்குக் காலம் தாம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களுடனும் அத்தகைய காலத்துக்கும், அத்தகைய நோக்கங்களுக்காகவும் தாயிஅல்—முத்லக் நியமித்தர்களை நியமிப்பதற்கும், அகற்றுவதற்கும், மாற்றீடு செய்வதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

தாயிஅல்—முத்லக்கினால் வைத்திருக்கப்படும் ஆதனத்தை உரித்தாக்கல்.

6. (1) இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன்மேல்—

ஐம்பத்திரண்டாவது தாயிஅல் — முத்லக் ஆகிய புனிதத் தலைவர் டாக்டர் சையத்னு மொகமட் புர்ஹானுதீன் அவர்களுக்கும் அவரது பதவியில் பின்வருபவர்களுக்கும் தாயிஅல் — முத்லக் என்ற அவரது தன்மையில் சொந்தமாக இலங்கையில் இருக்கும் ஒவ்வொரு விவரணத்தையும் சார்ந்த மற்றும் அசைவற்ற ஆதனங்கள் யாவும் அத்துடன் மரணச்சொத்து ஒவ்வொன்றும் அவற்றின்கண்ணுள்ள உரிமை, உரித்து அத்துடன் அக்கறை ஒவ்வொன்றும், இருந்தவரும் எல்லா ஒப்பந்தங்களுக்கும் அவற்றின்மீதுள்ள எல்லாச் சோத்தைகளுக்கும், பாரபத்தங்களுக்கு அமைவாகவும் அத்துடன் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(1) தவற்–ஈ–ஹறியாவின் நோக்கங்களுக்காக அத்துடன், அல்லது தாஊதி போரு சமூகத்தவர்களின் அனுகூலத்துக்காகவும் நன்மைக்காகவும் நம்பிக்கைப்பொறுப்பில் தாஊதி போரு நம்பிக்கைப்பொறுப்பினுல் அல்லது கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப் பொறுப்பினுல் அல்லது வேறு ஏதேனும் நம்பிக்கைப்பொறுப்பினுல் அல்லது எவரேனும் ஆளினுல் அல்லது ஆட்கள் குழுவினுல் ஏற்கனவே கொள்ளப்பட்டு, வைத்திருக்கப்பட்டு உடமைகொள்ளப்படுவதும் தாயிஅல்—மூத்லக்கினுல் அத்தகையதாக அங்கீகரிக்கப்படுவதுமான இலங்கையில் உள்ள அல்லாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மஸ்ஜிதுகள் (வழிபாட்டிடங்கள்) ஜமாஅத்தாருக்கள் (சனசமூக நிலையங்கள்) காபிறஸ்தான்கள் (இடுகாடுகள்) மதரஸாக்கள் (பாடசாலைகள்) யாவும், ஒவ்வொரு விவரணத்தையும் சார்ந்த ஏனைய அசைவற்ற ஆதனங்கள் யாவும் மாணச் சொத்துக்கள், அவற்றின் கண்ணுள்ள உரிமை, உரித்து அத்துடன் அக்கறை ஒவ்வொன்றும், அவற்றைப் பாதிக்கின்ற ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்புக்கும் அல்லது நிபந்தனைக்கும் அத்துடன் அற்றின் மீது இருந்து வருகின்ற எல்லா சோந்தைகளுக்கும் பாரபந்தங்களுக்கும் அமைவாகவும் அத்துடன் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் கூட்டுத்தாபனத்துக்கு உரிதாக்கப்படுதல் வேண்டும்.

7. தவற்—ஈ—ஹறியாவின் மதக்கட்டளைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் இணங்கவும் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாகவும், பின்வரும் கருமங்கள் எல்லாம் தொடர்பில் அல்லது ஏதேனும் ஒன்று தொடர்பில் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இல்லாதனவான விதிகளை ஆக்குவது கூட்டுத்தாபனத்துக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும் :— **கூட்டுத்தாபனத்தின் விதிகள்.**

(அ) தலைமை அலுவலகத்தின் இடம்;

(ஆ) அதன் அலுவலர்கள், சேவையாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரினதும் நியமனம், ஊதியம், இடமாற்றம், பதவிவிலகல் அத்துடன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு;

(இ) வங்கிக் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்தல் அத்துடன் மூடுதல்;

(ஈ) கணக்குப் புத்தகங்களையும் ஏனைய ஆவணங்களையும் வைத்திருத்தல்;

(உ) நிதி ஆண்டும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் கணக்கின் கணக்காய்வும் ;

(ஊ) கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்காகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல்;

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும்.

**தாயி அல்—முத்லக்குக்கு வருமதியான அத்துடன் அதனால் செலுத்தப்படற்பாலன வான தனிசுகள்.**

8. இச்சட்டம் தொடங்கும் தேதியன்று இலங்கையில் தாயிஅல்–முத்லக் என்ற தமது தன்மையில் புனிதத் தலைவர் டாக்டர் சையத்னா மொகமட் புர்ஹானுதீன் அவர்களுக்குள்ள எல்லாப் பொறுப்புக்களும் தனிசுகளும் இதனால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படல் வேண்டும் அத்துடன், அந்நாளன்று தாயிஅல்–முத்லக்கிற்குப் போமதியான எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான எல்லா ஒப்பப் பணங்களும் உதவுதொகைகளும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப் படல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.**

9. கூட்டுத்தாபனம் இலச்சினையொன்றை வைத்திருத்தல் வேண்டும், அது அலுவலக ரீதியாகவும் நீதிமுறையிலும் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். ஏதேனும் சாதனத்தில் இலச்சினையைப் பொறித்தலானது தாய்அல்–முத்லக்கினால் காலத்திற்குக் காலம் குறிப்பிட்ட காரியத்திற்காக முறைபாக நியமிக்கப்படும் அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் மெய்யென்று உறுதிப்படுத்தல் வேண்டும்.

**தாயி அல்–முத்லக்கின் சிறப்புரிமைகள்.**

10. இச்சட்டத்தில் உள்ளதெதுவும், தாயிஅல்–முத்லக்கின் தத்துவங்கள், சிறப்புரிமைகள், உரிமைகள் மற்றும் அதிகாரங்களை, எவ்வாறாயினும் இலங்கையின் சட்டத்துக்கு அமைவாக, எவ்வகையிலேனும் வரையறுத்தல், மட்டுப்படுத்தல், குறைத்தல் அல்லது வேறு ஏதேனும் முறையில் வேறுபடுத்தல், பங்கப்படுத்தல் அல்லது பாதித்தல் ஆகாது.

**குடியரசினதும் மறுபேர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.**

11. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இச்சட்டத்தில் கூறப்பட்டவர்களும் அவற்றின்மூலம், அவற்றிலிருந்து அல்லது அவற்றின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த, குடியரசின் உரிமைகளை, அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவை அல்லது வேறு எவரேனும் ஆளைப் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

**ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

12. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.